பக்கங்கள்:-26

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 02 | வியாழக்கிழமை | 16.05.2024 | அதிர்வு 289

## இளம் குடும்பப் பெண் வழுக்கி வீழ்ந்து சாவு!

### கம்பளையில் சோகம்

வீட்டின் மேல் மாடிக்குத் துணிகளை எடுப்பதற்காகச் சென்றிருந்த இளம் தாய் ஒருவர் வழுக்கி வீழ்ந்து 06▶

# ‘மே 18’ தமிழ்த் தேசிய துக்க தினம்

### அனுஷ்டிக்குமாறு ஒருங்கிணைந்த கட்டமைப்பு வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் தாயகத்தில் மே 18 ஆம் திகதியை தமிழ்த் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு ஒருங்கிணைந்த தமிழர்

கட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“தமிழ் மக்கள் மிகக் கொடூரமாகக் கொன்று அழிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவுறுகின்ற வலி சுமந்த நாட்களை நினைவு 07▶






# நினைவேந்தலை தடுக்கக் கூடாது!




### ரணிலே ஒப்புதல்

### மனோவிடமும் சார்ள்ஸிடமும் அவரே தெரிவிப்பு



“தங்கள் உறவுகளை நினைவேந்தும் உரிமை மக்களுக்கு உண்டு. அதைச் சட்டத்தாலும் மறுக்க முடியாது. அதை அனுமதிக்க வேண்டும். அதற்குத் தடை இல்லை.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்முடன் தொடர்பு கொண்டு இவ்விடயம் குறித்து பேசிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிடமும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனிடமும் தெரிவித்தார். 06▶



# மிகவும் கடினமான சூழலில் இருக்கின்றார்கள் தமிழர்கள்



### யாழில் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் தெரிவித்தார் அமெரிக்கத் தூதுவர்

(ந.லோகதயாளன்)

மிகவும் கடினமான சூழலில் தற்போது நீங்கள் (தமிழர்கள்) உள்ளீர்கள் என்பதனை ஏற்கின்றோம் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் 06▶




சில விடயங்களை எழுதினால் சர்ச்சைகள் வரும். சட்டங்கள் பாயும். விபரீதங்கள் நேரும்.

அதற்காக எழுதாமலும் – உண்மையை அம்பலப்படுத்தாமலும் – இருக்க முடியாது. அது பேனாவின் பொறுப்பை – கடமையை – பயத்தின் நிமித்தம் உதாசீனம் செய்வதாகவும் மாறிவிடும்.

கடமை மீது பொறுப்பைப் போட்டு விட்டு எழுத வேண்டியதுதான். வினை விளைவாக வந்தால் எதிர்கொள்வோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விவகாரத்தை ஒட்டிய விபரீதம் இப்போது 06▶

# ஆள் கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக தராதரம் பாராமல் சட்டம் அமுல்படுத்தப்படும்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



"ஆள் கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக தராதரம் பாராமல் சட்டத்தின் மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும்."

– இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ரஷ்ய – உக்ரைன் போரில் தொடர்புபட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. கடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பாதுகாப்புப் பிரதானிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆள் கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு, எதிராக தராதரம் பாராமல், சட்டத்தின் மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்பதை முதலில் வலியுறுத்த வேண்டும். மேலும், இந்த விவகாரம் தொடர்பாக சுமார் 288 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆள் கடத்தல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆள் கடத்தல் குறித்து சமூக வலைதளங்கள் மூலம் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அதிக சம்பளம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஆள் கடத்தலில் பலர் சிக்கி உள்ளனர். எனவே, இந்த ஏமாற்று முயற்சிகளில் பொதுமக்கள் சிக்கிக்கொள்ள வேண்டாம் என அரசாங்கம் கேட்டுக்கொள்கிறது. இந்த ஆள் கடத்தல் தொடர்பில் மேலதிக தகவல்கள் தெரிந்தால் 0112 401 146 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு கோருகிறோம்.

அத்துடன், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி முற்றாக அங்கவீனமடைந்த அல்லது யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு 55 வயது வரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 55 வயதின் பின்னர் அவர்களுக்கு சம்பளமோ அல்லது ஓய்வூதியமோ வழங்கப்படாதது குறித்து ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் கவனம் செலுத்தியது. முப்படைகளுக்கு மட்டும் வழங்கப்பட்ட இந்த சலுகை சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். எனவே, இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அனுமதியைப் பெற எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், சட்டபூர்வமாக இராணுவத்தை விட்டு வெளியேறாமல் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலம் எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. தற்போது பொது மன்னிப்புக்காக சுமார் 15 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 357 ஆக காணப்பட்டது.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் சேவையிலிருந்து விலகி மீண்டும் பணிக்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை 799 என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இராணுவ வீரர்களுக்கான காணிகளை விரைவாக வழங்குவதற்கும் சலுகைகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் விசேட குழுவொன்றை அமைத்துள்ளார். உறுமய வேலைத்திட்டத்துடன் ஒரே நேரத்தில் இடம்பெறும் இந்தப் பணிகளுக்கு காணி அமைச்சும் அதிக பங்களிப்பை வழங்கியுள்ளது. இது இராணுவ வீரர்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட தனித்துவமான நடவடிக்கை என்பதை குறிப்பிட வேண்டும்." – என்றார்.

# அஷ்ரப் ஞாபகார்த்த அருங்காட்சியக நிர்மாணத்தை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆற்றிய சேவைகளை கௌரவிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக "அஷ்ரப் நினைவு அருங்காட்சியகம்" ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எம்.எச்.எம். அஷ்ரபின் 24 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க எம்.எச்.எம்.அஷ்ரபின் பிறந்த ஊரான கல்முனையில் இந்த நினைவு அருங்காட்சியகம் நிர்மாணிக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்காக 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்கான நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திறமையான சட்டத்தரணியும் சிறந்த சட்டமியற்றுபவருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், புகழ்பெற்ற அரசியல்வாதி என்பதோடு அவர் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்காக பெரும் பணியாற்றியுள்ளார் .

முன்மாதிரியான மற்றும் மனிதாபிமானம் நிறைந்த மக்கள் பிரதிநிதியான அவர் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே மிகவும் மதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சீதையம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்துக்கு புனித சரயு நதி தீர்த்தம் இலங்கைக்கு வந்தது

இராமாயணத்துடன் தொடர்புடைய ஆலயமாக போற்றப்படுகின்ற நுவரெலியா சீதாஎலிய, சீதையம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ ராமஜன்ம பூமியான அயோத்தியில் உள்ள புனித சரயு நதியின் தீர்த்தம் நேற்று இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.

நுவரெலியா சீதாஎலியவில் சீதை சிறை வைக்கப்பட்ட இடமாகக் கருதப்படுகின்ற அசோக வனத்தில் உள்ள சீதையம்மன் ஆலய புனருத்தாரண பணிகள் நிறைவடைந்து எதிர்வரும் 19 ஆம் திகதி மகா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகளுக்காக இந்தியாவின் ஸ்ரீ ராம ஜன்ம பூமி அயோத்தியிலுள்ள புனித சரயு நதித் தீர்த்தத்தை விசேட தூதுக் குழுவினர் நேற்று இலங்கைக்குக் கொண்டுவந்தனர்.

சரயு புனித தீர்த்தம் அண்மையில் குழந்தை இராமருக்கு பிராண பிரதிஷ்டை செய்யப்பட்ட அயோத்தி ஆலயத்தில் பூஜிக்கப்பட்டு, உலக இராமாயண ஆய்வு மையத்தின் செயலாளர் பாலா வெங்கடேஷ்வர ராவ் தலைமையிலான குழுவினரால், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக நாட்டிற்கு எடுத்துவரப்பட்டது.

சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்திற்காக இந்தியாவிலிருந்து சீர்வரிசைப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன.

சீதையம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குழுவினர் இந்திய தூதுக் குழுவினரை வரவேற்பதற்காக விமான நிலையம் சென்றிருந்தனர்.

25 லிட்டர் தீர்த்தம் ஐந்து கலசங்களில் கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீராமர் சரயு நதிக்கரையிலேயே பிறந்து, சரயுவில் நீராடி வளர்ந்து சரயுவைக் கடந்தே கானகம் புகுந்து, சரயுவில் கலந்தே வைகுந்தம் புகுந்தார் என இராமாயணம் சிறப்பிக்கின்றது.

# தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



நாட்டில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தொழுநோய் ஒழிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தேசிய தொழுநோய் ஒழிப்புப் பிரிவின் ஊடாக தொழுநோய் பற்றிய துல்லியமான தகவல்களை சமூக ஊடகங்கள் மூலம் பகிர்வதற்கான வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொழுநோய் மிகவும் மெதுவாகப் பரவும் ஒரு நோயாகும் எனவும் இது ஆபத்தான நிலையில் இல்லை என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழுநோயைப் பற்றிய தவறான எண்ணங்களும் சமூகத்தில் தொழு நோயாளிகளாக மாறுபவர்களைப் புறக்கணிப்பதும் இன்றும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வருடத்தில் 264 புதிய தொழுநோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என தொழுநோய் ஒழிப்பு மையம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 24 பேர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என அதன் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் நிரூபா பல்லேவத்த குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடத்தில் 1,580 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் 180 சிறுவர்களும் அடங்குகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.








# யாழில் அமெரிக்கத் தூதுவர்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பதவியை பூர்த்தி செய்து கொண்டு விரைவில் தாய்நாடு திரும்பவிருக்கும் ஜுலி சுங் அமையார் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்து பல சந்திப்புகளில் ஈடுபட்டார்.

தமிழ் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் அமெரிக்க தூதர் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மானிப்பாயில் உள்ள அமெரிக்க மிஷனரியின் கிறீன் மெமோரியல் வைத்தியசாலைக்கு தூதுவர் விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டார்.

வடக்கு மாகாண கடற்படை தளபதியை காங்கேசன் துறை தலைமையகத்தில் அமெரிக்க தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அத்துடன் அண்மையில் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளையும் அமெரிக்க தூதுவர் பார்வையிட்டார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.















INDSRI FERRY

# தாமதத்திற்கு வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத சில சட்டரீதியான அனுமதிகள் காரணமாகவும், தாமதமான கப்பலின் வருகையினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை இயக்கமுடியவில்லை. சேவையினை **ஞாயிற்றுக்கிழமை 19/05/2024** இல் இருந்து இயக்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர். இதுவரை பதிவு செய்த பயணிகளை 19/05/2024 சேவைக்கு கட்டனமின்றி மாற்றியுள்ளோம்.

பதிவு செய்த பயணிகள் 19/05/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் அவர்கள் விரும்பிய திகதிகளில் பயணிக்கலாம் அல்லது செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப்பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். செலுத்திய கட்டணத்தினை பெற்றுக்கொள்ளலாம்.



IndSri Ferry Services Pvt Ltd
# 143/1, Uttamar Gandhi Road, Opp The Park Hotel,
Thousand Lights West, Nungampakkam,
Chennai - 600034, Tamil Nadu, India.

ANDROID APP ON Google play | Download on the App Store

W: www.sailindsri.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டவிழ்கின்றது. நினைவேந்தலுக்கும், முள்ளிவாய்க்கால் கஞ்சிப் பரிமாறலுக்கும் தடைவிதிக்கும் பொலிஸ் கெடுபிடி – அராஜகம் – கிழக்கில்தான் கட்டவிழ்கின்றது. அங்குதான் பொலிஸார் நீதிமன்றங்களை நாடி நினைவேந்தலுக்குத் தடை உத்தரவு எடுக்கின்றார்கள். நினைவேந்தலுக்குப் புலிப் பூச்சாண்டி காட்டுகின்றார்கள். புலிச் சாயம் பூசுகின்றார்கள். முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் சுகாதாரச் சீர்கேடு என்று புதிய தத்துவம் பிளக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாக இருக்கும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹணவின் வழிகாட்டலில் தான் எல்லாமுமே நடக்கின்றன என இப்போது கூறப்படுகின்றது.

அவர் ஒரு சட்டத்தரணி. பொலிஸ் பேச்சாளராகவும் இருந்தவர். தெற்கிலிருந்து கிழக்குக்கு அவர் இடமாற்றப்பட்ட போது, முதலில் பொலிஸ் ஆணைக் குழுவில் முறையிட்டு, அதைத் தற்காலிகமாகத் தடுத்தார். எனினும் நீண்ட காலமாக இடமாற்ற உத்தரவைத் தடுத்து வைத்திருக்க முடியவில்லை.

கிழக்குக்குப் பணியாற்றப் போய்த்தானாக வேண்டும் என்ற கட்டாயம் வந்த போது, அந்த இடமாற்றத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்தார். ஆனால் அதுவும் பயனளிக்கவில்லை. வெற்றியளிக்கவில்லை.

வேறு வழியின்றி கிழக்கில் பதவியைப் பொறுப்பேற்ற அவர் அங்கிருந்தபடி அரசு தலைமைக்கு குடைச்சல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார் போலும். அதன் மூலம் அங்கிருந்து மீண்டும் தென்னிலங்கைக்கு இடமாற்றம் பெறலாம் என அவர் எண்ணுகின்றார் என்று சில தரப்புகள் சந்தேகிக்கின்றன.

கிழக்கில் மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பாக சாணக்கியன் எம்.பி. போன்றோர் முன்னிலையில் தான் வழங்கிய உறுதிமொழிகளை இன்னுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

அது தொடர்பான உயர்மட்ட கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே விதிமுறை போதித்தவர் இந்தப் பொலிஸ் அதிகாரி என்ற பேச்சு சம்பந்தப்பட்ட தரப்புகளில் உண்டு.

கிழக்கில் இந்த அதிகாரியை வைத்திருந்தால் தனக்குக் குடைச்சல்தான் என்ற நிலையில் – இக்கட்டில் – மீண்டும் தெற்குக்கு அவருக்கு இடமாற்றம் அளிக்க ஜனாதிபதி தீர்மானிப்பார் என்று இந்த அதிகாரி நம்புகின்றாரோ என்னவோ தெரியவில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விவகாரத்தை அவருக்குக் கீழ் இருக்கும் பொலிஸார் கையாளும் விதம் தேர்தல் வரவிருக்கும் நேரம், ஒரு சிறுபான்மை இனத்தையே ஜனாதிபதிக்கு எதிராகத் திருப்பி விடும் சதி உள்நோக்கத்தை கொண்டதோ என்ற நியாயமான சந்தேகத்தைத் தராமல் இல்லை.

ஆனால் என்னை கேட்டால், ரணிலா, கொக்கா என்பேன். இந்த நளினத்துக்கெல்லாம் மசிபவர் அல்லர் ரணில் விக்கிரமசிங்க. இத்தகைய நளினம்தான் கிழக்கில் தமக்கு எதிராக நடக்கின்றது என்ற உண்மை ரணிலுக்கு சந்தேகத்துக்கு அப்பால் புரிய ஆரம்பித்தால், விவகாரம் அந்த அதிகாரிக்கு விபரீதமானாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை...!

## நினைவேந்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலை, மூதூர் – சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறியமைக்காகக் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் விரைவில் பிணையில் விடுவிக்க வழி செய்யப்படுவார்கள், அது தொடர்பாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உரிய தரப்புகளுக்கு வழிகாட்டல் விடுத்திருக்கின்றார் என்றும் இந்த உரையாடல்களின்போது ஜனாதிபதியால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சுகவீனம் காரணமாக இரண்டு, மூன்று நாள்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லாமல் ஓய்வில் இருந்த மனோ கணேசன் எம்.பி. நேற்று சற்று குணம் அடைந்த நிலையில், நேற்று மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் பொலிஸ் கெடுபிடி, அராஜகம் குறித்து விசனத்துடன் முறைப்பாடு செய்தார்.

அதை விவரமாகச் செவிமடுக்க முன்னரே, இவ்விடயம் குறித்து சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தன்னுடன் தொடர்பு கொண்டு பேசினார் என்றும், சம்பூரில் கைதானோரைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனோ கணேசனுக்குத் தெரிவித்தார்.

"உயிரிழந்தவர்களுக்காக உறவுகள் நினைவேந்தல் செய்வது அந்த உறவுகள் ஒவ்வொருவரினதும் உரிமை. அதை ஏன் தடை செய்யப் பொலிஸார் முனைகின்றனர் என்பது எனக்கு விளங்கவில்லை." – என்றும் மனோவிடம் ஜனாதிபதி கூறினார்.

"இது தொடர்பில் அரசுத் தலைவராக நீங்கள் ஒரு கொள்கை ரீதியான முடிவு எடுத்து, அதைப் பகிரங்கமாக அறிவித்துப் பொலிஸாருக்கும் நாட்டுக்கும் தெளிவான வழிகாட்டுதலை வழங்க வேண்டும். அதற்கான காலம் இதுதான். "தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் அல்லது அமைப்புடன் தொடர்பு படுத்தாமல் தங்கள் உறவுகளை நினைவேந்த அனைத்து மக்களுக்கும் உரிமையுண்டு. அதை அங்கீகரிக்கின்றோம். அதைத் தடுக்க முடியாது. தடுக்கக் கூடாது" – என்ற கொள்கைப் பிரகடனத்தை நீங்கள் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்." – என்று ஜனாதிபதியிடம் இதன்போது மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தினார்.

அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்வாரா என்பது தெரியவில்லை. ஒவ்வொருவருக்கும் மறைந்த தங்கள் உறவுகளை நினைவேந்த உரிமையுண்டு என ஏற்கனவே தாம் ஜனாதிபதிப் பதவிக்கு வந்த உடனேயே ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். ஆயினும் அவரின் கீழே இயங்கும் பொலிஸ் கட்டமைப்பு வேறு நிகழ்ச்சி நிரலில் விடயங்களைக் கையாள்வது இப்போது நிரூபணமாகி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## இளம் குடும்பப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

கம்பளை, நாராங்விட்ட பகுதியைச் சேர்ந்த 35 வயதான இரு பிள்ளைகளின் தாயே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரின் கணவன் வேலைக்குச் சென்றுள்ளார். மூத்த மகன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதுவதற்குச் சென்றுள்ளார். இந்நிலையில், இளைய மகன் தந்தைக்கு உணவெடுத்துக்கொண்டு சென்றுள்ளார்.

மதியம் மழை பெய்தபோது, மேல் மாடியில் காயப்போட்டிருந்த துணிகளை எடுப்பதற்காகத் தாய் சென்றுள்ளார். இதன்போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

பரீட்சை எழுதச் சென்றிருந்த மூத்த மகன், வீடு திரும்பியவேளை தாயைத் தேடியுள்ளார். இதன்போது தாய் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டுள்ளார். பின்னர் தந்தைக்கும், அயலவர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

## மிகவும் கடினமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்த அமெரிக்கத் தூதுவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே அமெரிக்கத் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், த.சித்தார்த்தன், இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

மேற்படி சந்திப்பில் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் விவகாரம் தொடர்பிலேயே அமெரிக்கத் தூதுவரால் அதிக அக்கறை செலுத்தப்பட்டது. அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிரான வழக்கு விடயம் குறித்தும் அமெரிக்கத் தூதுவர் வினவினார்.

குறித்த சந்திப்பில் பொது வேட்பாளர் விடயத்தில் கூட்டமைப்பின் சார்பில் கலந்துகொண்ட மூவரும் மூன்று நிலைப்பாடுகளில் காணப்பட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் முன்பு சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ என வாக்களித்து ஏமாற்றமே அடைந்தோம். அதனால் பொது வேட்பாளர் வேண்டும். இதனைத் தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் களமாகவும் பயன்படுத்தலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார். அதேநேரம், பொது வேட்பாளர் விடயம் பொருத்தமற்ற ஒன்று என்பதே தனது நிலைப்பாடு எனவும், இருப்பினும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபித்து ஓர் தீர்மானத்தை எட்ட முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தபோதும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மௌனம் காத்தார்.

இதேநேரம், "நில விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடயம், பொறுப்புக்கூறல், மனித உரிமை போன்ற விடயங்களில் நாங்கள் பல விடயங்களை இலங்கை அரசிடம் சொன்னோம். அவர்கள் செய்வதாக இல்லை. மிகவும் கடினமான சூழலில் தற்போது நீங்கள் (தமிழர்கள்) உள்ளீர்கள் என்பதனை ஏற்கின்றோம். இருப்பினும் நாம் தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்." – என்று அமெரிக்கத் தூதுவர் பதிலளித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிரான வழக்கு விடயம் குறித்து அமெரிக்கத் தூதுவர் வினவியபோது, "அதனைத் தனிப்படப் பேசுவதே பொருத்தமானது." – என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பதிலளித்தார்.

# இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க எதிரணிகளை ஒன்றிணையுங்கள்!

## சந்திரிகா அம்மையாரிடம் டிலான் வேண்டுகோள்




ரணில் – ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு விரட்டியடிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியுடன் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைக்கும் பொறுப்பை முன்னெடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு அழைப்பு விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்டவர்கள் அரசு பக்கமே உள்ளனர். இதே வழியில் சுதந்திரக் கட்சி பயணித்தால் யானை விழுங்கிய விளாம்பழத்தின் நிலையே சுதந்திரக் கட்சிக்கு ஏற்படும்.

அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருக்கவும், ஊழல்மிகு இந்த அரசை விரட்டியடிப்பதற்காகவும் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் அனைத்து சக்திகளையும் இணைக்கும் பொறுப்பை முன்னெடுக்குமாறு சந்திரிகா அம்மையாருக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

இன்னும் ஐந்து பௌர்ணமி தினங்களுக்குள் இந்த அரசு நிச்சயம் விரட்டியடிக்கப்படும்.” – என்றார்

# பெண் ஒப்பனை கலைஞர்களின் முன்னேற்றத்திற்கான உதவிகள்





நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பெண் ஒப்பனை கலைஞர்கள் மற்றும் சிறு கைத்தொழில் செய்யும் பெண்களை இணங்கண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக “மேக்கப் ஆர்ட்டிஸ்ட் கிளப் ஒப் லங்கா” மூலம் பல்வேறு உதவிகளை செய்யவுள்ளோம் என அதன் தலைவி திருமதி அனுஷா குமரேசன் தெரிவித்தார்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு 4, பம்பலப்பிட்டி லோரன்ஸ் ரோட் “ஏ.வி.எஸ். டவரில்” நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் மேக்கப் ஆர்ட்டிஸ்ட் கிளப் லங்கா மூலமாக சர்வதேச விருதுகளை வென்ற 9 பெண் ஒப்பனை கலைஞர்களும் கலந்து கொண்டு அவர்களின் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதேநேரம் எதிர்வரும் ஜுலை மாதம் 21ஆம் திகதி கொழும்பில் 250 இற்கும் மேற்பட்ட ஒப்பனை கலைஞர்களை ஒரே இடத்தில் ஒன்று சேர்த்து அவர்களின் ஒப்பனை கலைத்திறமைகளை வெளிக்காட்டி உலக சாதனையொன்றை நிலைநாட்டவுள்ளதாகவும் திருமதி அனுஷா குமரேசன் தெரிவித்தார்

## ‘மே 18’ தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூருகின்ற இந்தத் தருணத்தில் தமிழராகிய எம் ஒட்டுமொத்த ஆன்மாவையும் பாதித்த மே 18 ஐ தமிழ்த் தேசிய துக்க நாளாக நாம் அனைவரும் கடைப்பிடிப்போம்.

ஏற்கனவே வடக்கு மாகாண சபையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் இதனை உணர்வுபூர்வமாக தமிழர் தாயகமெங்கும் அனுட்டிக்கத் தமிழ்த் தேசிய சக்திகளோடு கலந்தாலோசித்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு விடுக்கின்றது.

இந்த நாளில் முள்ளிவாய்க்கால் சென்று நினைவேந்தக் கூடியவர்கள் வழமை போன்று முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பு ஒழுங்கு செய்த நிகழ்வுகளில் பெருந்திரளாகப் பங்கேற்குமாறு வேண்டி நிற்கின்றோம்

அதேநேரம் அங்கு செல்ல முடியாதவர்கள் தங்கள் பிரதேச வழிபாட்டுத்தலங்களில் ஒன்றுகூடி பிரார்த்தனைகளை மேற்கொள்ளவும் வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் அனைத்து தமிழர் வணிக வளாகங்களிலும், பொது இடங்களிலும் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிடுமாறும் கறுப்புப் பட்டியுடன் கடமைகளில் ஈடுபடுமாறும் கோருகின்றோம்.

எமதுதெருக்களை, பொது இடங்களை, வீட்டின்முன்னுள்ளவீதியோரங்களைத் துப்பரவு செய்வதுடன் அனைத்து கேளிக்கை நிகழ்வுகளையும் தவிர்த்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு நேர உணவாகவேனும் உண்பதற்கு ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் முன்வருவோம்.

மேலதிக தனியார் கல்வி நடவடிக்கைகள் அனைத்தையும் அன்றைய தினம் முழுமையாக நிறுத்தி எம் இளையோருக்கு எம் வலிகளின் ஆழத்தை சாத்வீகமாக உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவோம்.

பல்கலைக்கழக மாணவர் எற்பாடு செயதுள்ள இந்தக் காலப்பகுதிக்கான இரத்ததான முகாம்களில் பங்கேற்போம். வலி சுமந்த குடும்பங்களுக்கு மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆறுதல் அளிப்போம்.

இந்தத் தமிழ்த் தேசிய துக்க நாளில் ஒட்டுமொத்த தமிழராய் நிலத்திலும் புலத்திலும் எம் உச்சபட்ச ஆத்மார்த்த உணர்வை அமைதியாக – உறுதியாக வெளிக்காட்டுவோம். அதற்காக அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம்.” – என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சட்டத்தின் ஆட்சியா? எங்கே?

"கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. தெற்காசியாவில் புதிய சட்டங்களைச் செயற்படுத்தும் நாடாக இலங்கை மாறியுள்ளது."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புளகாங்கிதம் தெரிவித்திருக்கின்றார்.

சட்டங்களை உருவாக்குவதினாலோ, அது விடயத்தில் எண்ணிக்கை ரீதியான சாதனை படைப்பதனாலோ பெருமை கிடைப்பதில்லை. உண்மையில் நாட்டில் நீதி, நியாயமான, ஒழுங்கான சட்டத்தின் ஆட்சி நடக்கின்றதா என்பதில்தான் பெருமை உண்டு.

இத்துணை சட்டங்களை நிறைவேற்றித் தள்ளினோம் என்று பெருமைப்படுவதில் அர்த்தமில்லை.

இருக்கின்ற சட்டங்களையும், புதிதாக உருவாக்கப்படுகின்ற சட்டங்களையும் முழு அளவில் நடைமுறைப்படுத்தி, சட்டத்தின் ஆட்சியை முழுமையாக நிலைநிறுத்தினோம் என்று பெருமை பேசினால் - பீற்றிக் கொண்டால் - அது மெச்சத் தக்கது. முறையானது.

அதிக சட்டங்களை நிறைவேற்றும் ஆட்சியாளர்கள், உண்மையான சட்டத்தின் ஆட்சி இங்கு நிலவுவதாக உரிமை கோரவே முடியாது. அதனால்தான் முள்ளிவாய்க்கால் வரை வந்து முடிந்த பேரவலத்துக்கு இலங்கையின் சட்டங்களையும், நீதித் துறையையும் நம்பாமல், சர்வதேச விசாரணைகளை இந்தத் தீவின் தமிழர் தேசம் வலியுறுத்தி நிற்கின்றது.

அத்தகைய அவல நிலையிலேயேதான் இலங்கை இருக்கின்றது என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

சட்டத்தின் ஆட்சியில் முக்கியமானது அரசமைப்புச் சட்டம். அதுதான் நாட்டின் மீயுயர் சட்டம். அந்தச் சட்டத்துக்கே மாறி மாறி திருத்தம் கொண்டு வந்த 'ஆயராம்! காயாராம்!!' ஆள்கள் நிறைந்ததுதான்இந்தச்சட்டங்களைஆக்குகின்ற-யாக்கின்ற - நமது நாடாளுமன்றம் என்ற உண்மையை நாம் மறந்து விடக்கூடாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதற்கான அரசமைப்பு திருத்தம் 17 ஆவது திருத்தமாக சந்திரிகா காலத்தில் வந்தது. மீண்டும் அந்த அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கும் 18 ஆவது திருத்தம் மஹிந்தரின் காலத்தில் கொண்டு வரப்பட்டது. திரும்பவும் அந்த அதிகாரங்களை பறிக்கும் 19 ஆவது அரசமைப்பு திருத்தம் நல்லாட்சி காலத்தில் வந்தது. மீண்டும் 20 ஆம் திருத்தம் மூலம் கோட்டாபயவின் காலத்தில் அது மாற்றப்பட்டது. அவருக்கு அதிகாரங்கள் வாரி வழங்கப்பட்டன. நாட்டை விட்டு கோட்டாபய தப்பி ஓட, ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்தார். அவர் வந்ததும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் ஓரளவுக்கு வெட்டும் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

இப்படி நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பிலேயே சட்ட விபரீத விளையாட்டை நடத்திய நாடாளுமன்றமே இலங்கையினுடையது.

இதில் தனிச்சிறப்பு என்னவென்றால், இப்படியாக ஒன்றுக்கொன்று முரணாக - மாறாக - 17, 18, 19, 20, 21 ஆம் அரசமைப்பு திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் மாறி மாறி நிறைவேற்றப்படுவதற்குக் காரணமாக இருந்த - அவையவற்றுக்கு ஆதரவாக இருந்து நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்த - எம்.பிக்களின் பெயர்களைப் பட்டியலிட்டால் ஒரே நபர்களின் பெயர் மாறி மாறி எல்லா திருத்தங்கள் செய்த அணியிலும் இருக்கும்.

அதாவது, பல எம்.பிக்கள் ஒரு சமயம் ஜனாதிபதியின் நிறைவேற்ற அதிகாரங்களை வெட்டவும், மறுசமயம் அதற்கு மாறாக அந்த அதிகாரங்களை ஜனாதிபதிக்கு மீள வழங்கவும் வாக்களித்த 'கோமாளித்தனத்தை' மக்கள் காணலாம். அத்தகைய கோமாளி(ஜோக்கர்) கூட்டத்தையும் உள்ளடக்கியவர்களால் 75 சட்டங்களை அல்ல, 750 சட்டங்களை நிறைவேற்றினாலும் அதில் பெருமை இல்லை.

நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பின் பகுதியாக நிறைவேற்றப்பட்டு, கடந்த 36 ஆண்டுகளாக அந்தச் சட்டத்தில் தெளிவாக இருக்கும் 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த முடியாது என்று பிடிவாதம் பிடிக்கும் அரசையும், அரசுத் தலைவரையும், நாடாளுமன்றத்தையும் கொண்டிருக்கும் குதர்க்கமான நாடு இது. அரசமைப்புச் சட்டத்தில் இருக்கின்ற விடயத்தை நடைமுறைப்படுத்த நாடாளுமன்ற அனுமதி தேவை என்று புதிய அரசியல் தத்துவப் பாடத்தை நாடாளுமன்றத்திலேயே எடுத்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவர் சட்டத்தின் ஆட்சி குறித்து பிரலாபிப்பது யாரோ வேதம் ஓதுவது போல இருக்கின்றது..!

# நான் இஸ்லாமியர்களுக்கு எதிரானவன் அல்லன்

## பிரதமர் நரேந்திர மோடி கூறுகின்றார்

"நான் இஸ்லாமியர்களுக்கு எதிரானவன் அல்லன்" என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார கூட்டங்களில் பிரதமர் மோடி மத நிந்தனை செய்கின்றார் என எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தி வரும் நிலையிலேயே பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் ஒரு போதும் வாக்கு வங்கி அரசியலுக்காக செயல்படுவது இல்லை , நான் மத ரீதியாக பேச தொடங்கினால் நான் பொது வாழ்க்கையில் இருப்பதற்கு தகுதி இல்லாதவன் ஆகி விடுவேன். நான் ஒருபோதும் அப்படி செயல்படுவது இல்லை. என்னை இஸ்லாமியர்களுக்கு எதிரானவன் போல சித்தரிக்கிறார்கள்.

இஸ்லாமியர்களில் பெரும்பாலானவர்கள் என்னை புரிந்து கொண்டு இருக்கிறார்கள். நிச்சயம் அவர்கள் எனக்காக வாக்களிப்பார்கள். நான் மத ரீதியாக பேசவில்லை என்பது



அவர்களுக்கு புரியும். நான் இந்து, முஸ்லிம் பற்றி பேசுவது இல்லை. இதனை எனது வாக்குறுதியாகவே மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்." – என்றார்.

# பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியை மீட்போம்

## அமித் ஷா மீண்டும் உறுதி



"பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியானது இந்தியாவுக்கு சொந்தமானது. அதை நாங்கள் மீட்போம்."

– இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

மேற்கு வங்க மாநிலம் செரம்பூரில் நடந்த தேர்தல் பேரணியில் பேசிய மத்திய அமைச்சர் அமித் ஷா,

"இந்த தேர்தலானது இண்டியா கூட்டணியின் ஊழல் தலைவர்களுக்கும், நேர்மையான அரசியல்வாதி நரேந்திர மோடியை தேர்ந்தெடுப்பது தொடர்பாக நடக்கும் தேர்தல். பிரதமர் மோடி முதல்வராக இருந்தபோதும், பிரதமராக இருந்த போதிலும் அவர் மீது ஒரு குற்றச்சாட்டு கூட இல்லை.

2019 இல் 370 ஆவது பிரிவை ரத்து செய்த பிறகு காஷ்மீரில் அமைதி திரும்பியுள்ளது. 2019 ஆம் ஆண்டு, சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படுவதற்கு முன்பு, அதுவரை மாநிலமாக இருந்த ஜம்மு – காஷ்மீரில் கற்கள் வீசப்பட்டன. இப்போது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் கற்கள் வீசப்படுகின்றன. ஊடுருவல்காரர்கள் வேண்டுமா அல்லது குடியுரிமை திருத்தச் சட்டம் வேண்டுமா என்பதை மேற்கு வங்க மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். ஜிஹாத்துக்கு வாக்களிக்க வேண்டுமா அல்லது விகாஸ்'க்கு (வளர்ச்சி) வாக்களிக்க வேண்டுமா என்பதை மேற்கு வங்க மக்களே தீர்மானிக்க வேண்டும்.

மணிசங்கர் அய்யர் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் பாகிஸ்தான் அணுகுண்டு வைத்திருக்கிறது என கூறி வருகிறார்கள். ஆனால், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் இந்தியாவுக்கு சொந்தமானது. அதை நாங்கள் மீட்போம்." – என்றார்.

# மண்டியில் வேட்புமனு தாக்கல் செய்தார் நடிகை கங்கனா ரனாவத்

இமாச்சல பிரதேசத்தில் 4 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. இதில் 3 தொகுதிகள் பா.ஜ.க. வசம் உள்ளன. மண்டி மக்களவைத் தொகுதி மட்டும் காங்கிரஸ் வசம் உள்ளது. தற்போதைய மக்களவைத் தேர்தலில் மண்டி மக்களவைத் தொகுதியில் பா,ஜ,க, வேட்பாளராக நடிகை கங்கனா ரனாவத் களமிறக்கப்பட்டு உள்ளார்.

அவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் விக்ரமாதித்ய சிங் போட்டியிடுகிறார். மறைந்த முன்னாள் முதல்வர் வீரபத்ர சிங்கின் மகனான இவர், கங்கனாவுக்கு பெரும் சவாலாக உள்ளார். இவரது தாய் பிரதிபா சிங் தற்போது மண்டி எம்.பியாக உள்ளார்.

எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி மண்டி மக்களவைத் தொகுதிக்கு தேர்தல் நடக்கிறது. இந்த சூழலில் பா.ஜ.க. வேட்பாளர்



கங்கனா ரனாவத் நேற்று முன்தினம் மண்டியில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் வெளிநாட்டுப் பயணங்கள் இரத்து



உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஜெலன்ஸ்கி தமது வெளிநாட்டுப் பயணங்களை இரத்துச் செய்துள்ளார்.

வடகிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு தீவிர மடைந்துள்ளதால் அவர் இந்த தீர்மானத்தை மேற்கொண் டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை கார்கிவ் நகருக்கு அருகில் உள்ள எல்லைப் பகுதியில் அத்துமீறி ரஷ்யா தமது ஊடுருவலை ஆரம்பித்தது.

எனினும் ரஷ்யாவின் ஊடுருவலை தடுத்து விட்டதாக உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது.

# ஸ்லோவாக்கியா பிரதமர் மீது துப்பாக்கிச் சூடு; ஒருவர் கைது




ஸ்லோவாக்கியா பிரதமர் ரொபட் ஃபிகோ மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.


இந்த சம்பவத்தில் காயமடைந்த அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

ஸ்லோவாக்கியாவின் – ஹன்ட்லோவா நகரில் உள்ள கலாசார மாளிகைக்கு வெளியே இந்த துப்பாக்கிப் பிரயோ கம் நடத்தப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரி விக்கின்றன.

அதேநேரம் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

ஐரோப்பாவின் முக்கிய தேர்தலாக கருதப்படும் ஸ்லோவாக் கியாவின் நாடாளுமன்ற தேர்தல் எதிர்வரும் 3 வாரங்களில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் சர்வ தேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.









# 2 வருடங்களில் 75 சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. தெற்காசியாவில் புதிய சட்டங்களைச் செயற்படுத்தும் நாடாக இலங்கை மாறியுள்ளது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தெல்தெனிய புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, சட்டத் துறையில் பல புதிய சீர்திருத்தங்களைச் செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் 75 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சில நாடாளுமன்றங்கள் 04 அல்லது 05 வருடங்கள் செயற்பட்ட போதிலும் இந்த அளவு சட்டங்களை நிறைவேற்றியதில்லை.

அரசாங்கம் அதன் பணிகளை செய்ய வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களை உருவாக்க நாடாளுமன்றத்திற்கு வர வேண்டும். அதன்படி புதிய சட்டங்களை நிறைவேற்றி புதிய சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்த நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

மேலும், சட்டத்தின் தாமதம் குறித்தும் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். உரிய நேரத்தில் சட்டம் செயற்படுத்தப்படுத்துவதே எம் முன்பிருக்கும் சவாலாகும். வழக்கு விசாரணைகள் திறம்பட நடத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் பெருமளவில் வழக்குகள் புதிதாக தாக்கல் செய்யப்படும்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு சொத்துக்களை அழித்தால் அங்கே சட்டமே இருக்காது. ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை சட்டத்தின் ஆட்சியிலேயே தங்கியிருக்கிறது. நீதி நிலைநாட்டப்படும் போது மாத்திரமே நாடு என்ற வகையில் அங்கீகாரம் கிடைக்கும். இல்லாவிட்டால் நாட்டில் அபிவிருத்தி இருக்காது. முதலீடுகளை எதிர்பார்க்கவும் முடியாது. அதனால் புதிய சட்டக் கட்டமைப்பை நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறோம்.

மேலும், நாட்டில் தற்போது புதிய பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். அதற்காக பல சட்டங்களை கொண்டுவர சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக மத்திய வங்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டத்தை சமர்ப்பித்துள்ளோம். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு மின்சார சபையின் நஷ்டமும் ஒரு காரணமாகும். வலுவான மின்சார சபையை செயற்படுத்த வேண்டும். அதனால் அந்தச் சபையின் மீது அரசாங்கம் கொண்டிருக்கும் உரிமைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

மேலும் மூன்று சட்ட மூலங்களை அரசாங்கம் அமைச்சரவையில் சமர்பித்துள்ளது. திங்கட்கிழமை அமைச்சரவையில் அதற்கான அங்கீகாரம் பெறப்படும். அதன் கீழ் கடன் முகாமைத்துவத்தையும் நாம் முன்னெடுத்திருக்கிறோம்.

இதுவரை தேசிய கடன் கட்டுப்பாடு இருக்கவில்லை. கடனைக் குறைக்க நாம் கடனைக் மட்டுப்படுத்த வேண்டும்.

மேலும், அரசாங்கத்தின் நிதிக் கட்டுப்பாடு ஒழுங்கின்படி முன்னெடுக்கப்படுகிறது. இந்த ஒழுங்கு முறைகளை மீறவும் முடியும். சுற்று நிருபங்களை திருத்தும் இயலுமையும் உள்ளது. இதுபோன்ற நிதிக் கட்டுப்பாடு நாட்டில் இதற்கு முன்னதாக இருக்கவில்லை.

இன்று அரசாங்கத்துக்குச் சொந்தமான சொத்து பற்றி எவருக்கும் தெரியாது. பொது நிதி

12











# 2 வருடங்களில் 75 சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நிர்வாகத்திற்கான சட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நியூசிலாந்து முதலில் இந்த முறையை ஆரம்பித்தது. அதன் பிறகு இங்கிலாந்து, ஆஸ்திரேலியாவைப் போல் இந்தியாவும் அதை அமுல்படுத்தியுள்ளது. இலங்கை அதன் புதிய வடிவத்தை சமர்பித்திருக்கிறது.

இறக்குமதி பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நாம் மாற வேண்டும். அதற்கான பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும். அதன்படி சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளோம். அதிலிருந்து நாம் வெளியேற முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறியதாக முன்னர் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இப்போது அது சட்டப்படி செயல்படுத்தப்படுவதால் ஒப்பந்தங்களை மீற முடியாது.

இதை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இல்லையேல் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நாம் எதிர்பார்க்கும் ஆதரவு கிடைக்காது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஜூன் மாத அமர்வுகளுக்கு பின்னர் இந்த சட்டங்கள் கொண்டு வரப்படும்.

சர்வதேச நாணய நிதியத்துடனும் எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும் உடன்படிக்கைக்கு வந்ததன் பின்னர் இந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம். மேலும், இது தொடர்பாக தனியார் கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தையும் வெற்றிகரமாக நடந்து வருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததாக சிலர் கூறுகின்றனர். மேலும் சிலர் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று கூறுகின்றனர். இதுபோன்ற அறிக்கைகள் வெளியிடப்பட்டால், அடுத்த நாள் பங்குச் சந்தை வீழ்ச்சியடைகிறது. பிறகு அவர்கள் பங்குகளை வாங்குகிறார்கள். அப்படி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்ததும், மீண்டும் நிலைமை வழமைக்கு வருகிறது. இது அரசியலுக்கு அப்பாற்பட்டது.

மேலும் நமது நாட்டில் ஊழல் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. சர்வதேச நாணய நிதியமும் எமக்கு கடன் வழங்கிய நாடுகளும் எம்முடன் இது தொடர்பில் கலந்துரையாடின.

அதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்வைத்தோம். அதில் திருத்தங்கள் சேர்க்கப்பட்டு, இணக்கப்பாடு எட்டப்பட்டதையடுத்து, தற்போது புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அதற்காக 04 முக்கிய சட்டங்கள் உள்ளன. அதில் முதலாவதாக 21 ஆவது திருத்தத்தை முன்வைத்தோம்.

அதன்படி, இது தொடர்பான ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ஊழல் தடுப்புச் சட்டம் 2023 இல் கொண்டு வரப்பட்டு, 2024 இல் திருத்தம் செய்யப்பட்டது."– என்றார்.














# யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று கல்வியங்காட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!



இனப்படுகொலைப் போரின் வலிகளை தலைமுறை கடந்தும் கடத்தும் வகையில் தமிழர் தாயகமெங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுச் சந்தியில் நேற்றுப் புதன்கிழமை அன்று வழங்கி வைக்கப்பட்டது.




























TURNING POINT

வடக்கிலும் தெற்கிலும்
மரணித்தவர் நம்மவரே.

எம் தாய்நாட்டில் தம் உயிரை
இழந்த அவர்கள் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்தனையோடு மௌனம்
செலுத்தி அஞ்சலி செய்ய
வாருங்கள் கைகோர்ப்போம்....

சத்தியம் செய்யுங்கள்....
நாம் மாறிவிட்டோம் என்று.....

நாம் நம்மை அறிந்து
கொண்டோம் என்று
சொல்வதற்கு...

வாருங்கள் விளக்கொன்றை
ஏற்றுவதற்கு.....

**மே 17 | மாலை 6.00 மணிக்கு**

கொழும்பு விஹாரமஹாதேவி

பூங்காவன புத்தர் சிலைக்கு அருகில்

யுத்தத்தில் பற்றியெரிந்த உள்ளங்களை ஆற்ற,
மனிதநேயம் மிக்க நட்புரீதியிலான
கூட்டத்திற்கு,
தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

YMBA | Darmashakthi Organization | IRES | GTF | Sanga for Better Sri Lanka




# மன்னார் பாலியாறு நீர்த்திட்டம் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பம்

(மன்னார் நிருபர்)

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொட்டமானின் தலைமையில் மன்னார் வெள்ளாங்குளம் பாலியாறு நீர்த்திட்டம் நேற்றைய தினம் புதன் கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

116 பில்லியன் (11ஆயிரத்து 600 கோடி) ரூபா செலவில் வட மாகாண மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்குவதை மையமாக கொண்டு மன்னார் மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் நீர் சேகரிப்பு மற்றும் நீர் பயன்பாட்டை வினைத்திறனாக்கக் கூடியவகையில்மேற்கொள்ளப்படவுள்ள வெள்ளாங்குளம் – மன்னார் பாலியாறு நீர்த்திட்டம் மற்றும் மல்லாவி முல்லைத்தீவு நீர்வழங்கல் திட்டங்கள் சம்பிரதாயபூர்வமாக நேற்றைய தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினரும், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான கே.காதர் மஸ்தான், வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் திலீபன், அமைச்சின் செயலாளர் நபீல், பொது முகாமையாளர் பாரதிதாசன் இணைந்து திட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

பாலியாறு நீர்த்திட்ட அங்குரார்ப்பண நிகழ்விற்கான நினைவுக் கல் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோரால் திரைநீக்கம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து பாலியாறு நீர்த்திட்ட அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

பாலியாறு நீர்த்திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களும், பூநகரி பிரதேசத்தின் ஒரு பகுதியும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. அதற்கமைய, மேற்குறித்த பகுதிகளில் வசிக்கும்127,746 குடும்பங்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை விநியோகிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.






# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியமைக்காக தமிழ்ப் பொதுமக்களைக் கைது செய்வதா?

## கிழக்கு பல்கலை கலை, கலாச்சார பிரிவு மாணவர் ஒன்றியம் கண்டனம்

(கனகராசா சரவணன்)

திருகோணமலை சேனையூர்ப் பகுதியில் முள்ளிவாய்கால் கஞ்சியைப் பகிர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூர்ந்தவர்களை அநாகரிகமான முறையில் கைது செய்த இலங்கைப் பொலிஸாரின் அத்துமீறலுக்கு கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாச்சார பிரிவு மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.


முள்ளிவாக்கால் கஞ்சி வழங்கிய குற்றச்சாட்டில் திருகோணமலையில் பொதுமக்கள் கைது செய்யப்பட சம்பவத்தைக் கண்டித்து கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சார பிரிவு மாணவர் ஒன்றியம் ஊடக அறிக்கை ஒன்றை நேற்றுப் புதன்கிழமை வெளியிட்டுள்ளது.

உரிமையை வேண்டி போராடிய ஓர் இனத்தின் மீது சர்வதேச நாடுகளை தவறாக வழு நடத்தியவாறு இலங்கை அரசால் நடாத்தப்பட்ட பாரிய இனவழிப்பினால் இறுதி எட்டு மாதங்களில் . லட்சத்து 46 ஆயிரத்து 679 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப் பட்டனர்.

அந்தவகையில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை கொண்டு, கொன்றொழிக்கப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், பொதுமக்களுக்கு 15 ஆண்டுகள் கடந்தும் நீதி வழங்கப்படாத நிலையில், தமிழரின் உரிமைகள் இலங்கை அரசினாலும் அதன் ஆதரவில் இருக்கும் பெரும்பான்மை சமூகத்தினாலும் தொடர்ந்து மறுக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் வருகின்றன.

இலங்கை அரசினாலும் படைகளினாலும் கொன்று குவிக்கப்பட்ட எமது மக்களை நினைவுகூரும் உரிமையிலும் இலங்கை அரசாங்கம் கைவைத்துள்ளது. முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை நினைவுகூரும் முகமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பூர் சேனையூர் புவனகணபதி ஆலையத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டது.

அதில் பங்கேற்று கஞ்சி வழங்கிய குற்றச்சாட்டில் சமூகசெயற்பாட்டளரான 40 வயதுடைய கமலேஸ்வரன் விஜிதா, 40 வயதான செல்வவினோத்குமார் சுஜானி, பிரதேச சபை முன்னாள் உறுப்பினரான 43 வயதுடைய நவரெட்ணராஜா ஹரிஹரகுமார், கிழக்கு பல்கலைக்கழக கலைப்பிரிவுக்கு தெரிவாகியுள்ள 22 வயதுடைய கமலேஸ்வரன் தேமிலா ஆகியேர் கைது செய்யப்பட்டனர். இதனை வன்மையாக கண்டிக்கின்றோம். அதேவேளை அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.



STUDENT UNION
FACULTY OF ARTS & CULTURE
EASTERN UNIVERSITY, SRI LANKA

Mr.T.PRATHEEPAN
Secretary
Student Union
Faculty of Arts & Culture
Eastern University, Srilanka

அதேவேளை தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைக்கூட மறுக்கும் இலங்கை அரசை சர்வதேசம் கண்டிப்பதுடன் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய அழுத்தம் கொடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். – என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்தால் 1,700 ரூபா சம்பள வர்த்தமானிக்கு ஆட்சேபனை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிப்பதற்காக கடந்த மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு நேற்று தமது ஆட்சேபனையை தெரிவித்ததாக பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்தது.

மேற்படி, வர்த்தமானி தொடர்பில் ஆட்சேபனை தெரிவிக்கும் காலம் நேற்றுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிப்பது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி தொடர்பில் தமது ஆட்சேபனையை நேற்று தொழில் ஆணையாளரிடம் சமர்ப்பித்தனர் எனப் பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்தார்.

தாம் ஏற்கனவே முன்மொழிந்துள்ள உற்பத்திக்கு ஏற்றாற்போன்ற சம்பள அதிகரிப்பை வழங்கத் தாம் தொடர்ந்தும் தயாராக இருக்கின்றனர் என தாம் அதில் குறிப்பிட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# கடலுக்குள் விழுந்த கனரக ஹன்டர் நீண்ட போராட்டத்தின் பின்னர் மீட்பு

## சாய்ந்தமருது பௌஸி மைதானத்திற்கு அருகே சம்பவம்

**(பாறுக் ஷிஹான்)**

கடலுக்குள் விழுந்த கனரக ஹன்டர் வாகனம் நீண்ட போராட்டத்தின் பின்னர் மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பௌஸி மைதானத்திற்கு அருகே நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இப்பகுதியில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக கரையோரம் பேணல் திணைக்களத்தின் கண்காணிப்பில் இப்பகுதியில் பாரிய கற்கள் போடப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக கல் அணைகள் அமைத்து கற்களைப் போட்டு நிரப்பும் முதற்கட்ட நடவடிக்கைக்காக பாரிய கற்களைக் கொட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஹன்டர் கனரக டிப்பர் வாகனம் வழமை போன்று கற்களை கடலுக்குள் கொட்டுவதற்காக சென்ற நிலையில் குடை சாய்ந்து கவிழ்ந்தது.

எனினும் குறித்த வாகனத்தை செலுத்திய சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பினார். கடலுக்குள் விழுந்த வாகனம் கனரக ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன்நீண்ட போராட்டத்தின் பின்னர் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.












# மல்லாவி சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்மாணத்திற்கு நேற்று அடிக்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை மற்றும் துணுக்காய் பகுதி மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்கும் நோக்குடன், மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டத்திற்கான, நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடால்ளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

நிலத்தடி நீரினால் மாந்தை மற்றும் துணுக்காய் பகுதிகளில் மூன்று வீதமான மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிறுநீரகப் பாதிப்புக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது .

வவுனிக்குளம் நீர்தேக்கத்திலிருந்து நீரைப் பெறுகின்ற கரும்புள்ளியான் குளத்திலிருந்து, புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மேற்பரப்பு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

உலக வங்கியின் 1856 மில்லியன் ரூபா நிதி அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டத்திற்கான நிர்மாணப்பணிகளை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் ஊடாக மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலகங்க ளுக்கு உட்பட்ட 35 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 6,968 குடும்பங்களை சேர்ந்தவர்கள் நன்மையடையவுள்ளனர்.










# காரைதீவில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டது

(பாறுக் ஷிஹான்)

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் செயற்பாடு காரைதீவில் நேற்று இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் தலைமையில் குறித்த கஞ்சி வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு காரைதீவு சந்தை கட்டடத் தொகுதிக்கு முன்னால் இடம்பெற்றது.

இதன்போது சக்தி மீன்பிடி சந்தைப் படுத்தல் கூட்டுறவு சங்கத் தலைவர் கோபால், சிவில் செயற்பாட்டாளர்களான விநாயகம் விமல்நாதன், கணபதிப் பிள்ளை கரிசன் ஆலய தர்மகர்தாக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் நேற்றயதினம் கல்முனை பாண்டிருப்பு பிரதேசத்தில் நடைபெறவிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்விற்கு முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் உள்ளிட்ட 5 பேருக்கு நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் அது நிறுத்தப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.















# பல்கலை கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு இனித் தீவிரமாகும்

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பை மேலும் வலுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்காமையே இதற்கான காரணமாகும்.

அதற்கிணங்க, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு 14 ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.



## மரண அறிவித்தல்



பிறப்பு
1947/06/10

இறப்பு
2024/05/14

வட்டகொடை மடகொம்பரைத் தோட்டம் புதுக்காடு பிரிவைச் சேர்ந்த

## சாமிநாதன் பாக்கியம்

(பாக்கியா பதிப்பக உரிமையாளர்)

அவர்கள் காலமானார்.

இவர் மயில்வாகனத்தின் அன்புத் துணைவியாரும், புனிதலெட்சுமி (குமுதா), அருள்மணி (கீதா), முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மடகொம்பரை தோட்ட இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன்,

**16-5-2024 மாலை 2.30 மணிக்கு**

தலவாக்கலை - பூண்டுலோயா வீதியில் வட்டகொட நகரத்திற்கு அடுத்த மடகொம்பரை புதுக்காடு இல்லத்தில் இறுதி கிரியைகள் இடம்பெற்று புதுக்காடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: மகன் - மல்லியப்புசந்தி திலகர்
பாக்யா பதிப்பகம். தாரணி அச்சகம் ஹட்டன்

பாக்யா பதிப்பகம்

# இலவச அரிசி பெற்றுக் கொள்ளாதவர்கள் குறித்து அறிக்கையினை கோருகின்றார் செஹான் சேமசிங்க

அஸ்வெசும நலன்புரி நன்மையை பெறுகின்ற போதிலும், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இலவச அரிசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிக்கை நிதியமைச்சின் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அந்த அறிக்கை அடுத்த வாரத்துக்குள் கிடைக்குமென தாம் எதிர்பார்க்கிறார் என அவர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி திட்டம் தொடர்பில் மாவட்ட செயலாளர்களுக்கு விளக்கமளிப்பதற்காக கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



நாட்டில் வறுமையில் உள்ள குடும்பங்களை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தினால் இலவச அரிசி வழங்கப்படுவதாகவும், அஸ்வெசும பயனாளிகளுக்கு குறித்த அரிசி கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் எனவும் மாவட்ட செயலாளர்களுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் இந்த அரிசியைப் பெற்றுக் கொள்வதற்கு குறிப்பிட்ட ஒரு இடத்துக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளதால், சிலர் அதனை பெற்றுக்கொள்வதற்குச் செல்லாமல் இருக்கின்றனர்.

இதனால் சில தரப்பினர் குறித்த அரிசியை மோசடி செய்து வருகின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே இந்த அறிக்கை கோரப்படுவதன் ஊடாக அரிசியை பெறாதவர்களை இலகுவாக அடையாளம் காண முடியும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம் எதிர்வரும் ஜுன் மாதமளவில் அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாவது கட்ட நலன்புரி நன்மைகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# தாதியர் உள்ளிட்ட சுகாதாரத் தொழிற்சங்கத்தினர் வடமேல் மாகாணத்தில் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பு

தாதியர்கள் உள்ளிட்ட 72 தொழிற்சங்கங்களால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு நேற்று வடமேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய, நேற்று காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை வடமேல் மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் அனைத்து சுகாதார நிலையங்களில் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது என சுகாதார தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட தாமதமே பணிபகிஷ்கரிப்பிற்கான காரணம் என சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.




பொருளாதார நீதி தொடர்பில் சுகாதார அமைச்சின் கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 72 சுகாதார தொழிற்சங்கங்கள் கடந்த வியாழக்கிழமை இந்தப் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்தன.

# பொதுத் தேர்தலை முதலில் நடத்துமாறு கோரிக்கை; ஜனாதிபதியிடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை

## ஸ்ரீ லங்கா பொதுஜனப் பெரமுன தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதியிடமிருந்து இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன தெரிவித்துள்ளது.

கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ கடந்த திங்கள் கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடினார் எனப் பொதுஜனப் பெரமுன கூறியுள்ளது.

இருதரப்பினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் பஸில் ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றுள்ள ஏழாவது கலந்துரையாடல் இதுவாகும்.

கடந்த திங்கள் கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில், நாட்டின் அபிவிருத்தி தொடர்பான கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஸ்ரீலங்கா பொதுஜெ பெரமுனவின் தேர்தல் பிரசார நடவடிக்கை, எதிர்வரும் 26 ஆம் திகதி அனுராதபுரம் கலாவாவி தேர்தல் தொகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அங்கிருந்து தொகுதி மட்டத்தில் பிரசாரங்களை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி வேட்புமனுக்களை ரத்துச் செய்வது சாத்தியமில்லை

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை ரத்துச் செய்வது நடைமுறை சாத்தியம் இல்லை என தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற சட்டம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலுக்குப் பின்னரே உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை ரத்துச் செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ரத்துச் செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவித்திருந்தார்.



# ஆறுகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது

கடந்த சில நாள்களாக நிலவும் மழை யுடனான காலநிலையை அடுத்து ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வரு கின்றது. சில பகுதிகளில் வெள்ளப் பெருக் குகளும் பதிவாகியுள்ளன.

களுகங்கை மற்றும் வளவ கங்கை ஆகிய ஆறுகளின் நீர்மட்டம் எச்சரிக்கை மட்டத்தை விடவும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மொரகெட்டிய, மாகுர உள் ளிட்ட பகுதிகளில் சிறு வெள்ளப் பெருக்கு பதிவாகியுள்ளது.

எனவே ஆறுகளை அண்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதா னத்துடன் செயற்பாடுமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.



## கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை:

# விஞ்ஞான பாட வினாத்தாளுக்கு இரு இலவசப் புள்ளிகள் கிட்டும்

இன்றுடன் நிறைவடைந்த 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞான பாட வினாத்தாளுக்காக இரண்டு இலவச புள்ளிகளை வழங்க தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகசந் திப்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, விஞ்ஞான பாட வினாத்தாளின் பகுதி ஒன்றில் ஒன்பதாவது மற்றும் 39 ஆவது வினாக்களுக்காக தலா ஒவ்வொரு புள்ளிகள் வீதம் இரண்டு இலவச புள்ளிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# பருத்தித்துறை முனைக் கடற்கரையில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் பருத்தித்துறை முனைக் கடற்கரையில் முள்ளிவாய்க்கால் வாரத்தின் 4 ஆம் நாள் நினைவஞ்சலியும் கஞ்சி வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றன. இந்த நிகழ்வு முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இறுதிப்போரில் உயிரிழந்தவர்களின் உறவுகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள்.










# காத்தான்குடியில் மினி சூறாவளி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி , பூநொச்சிமுனை கடற்கரையில் நேற்று மாலை வீசிய மினி சூறாவளி காற்றினால் பூநொச்சி முனை கடற்கரையில் உள்ள மஸ்ஜிதுல் உமர் பள்ளிவாயலின் கூரை உட்பட பல பகுதிகளிலும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதன் போது எவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை.

# கொட்டும் மழையிலும் யாழ் பல்கலை மாணவர்களினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுப்பு

முள்ளிவாய்க்கால் தமிழினப்படு கொலையை தலைமுறைகளிற்கு கடத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் கொட்டும் மழைக்கும் மத்தியிலும் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில்ச் சந்தியில் வைத்து வழங்கப் பட்டது.

2009 ஆம் ஆண்டு சிறிலங்கா ராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைப் போரின் போது தமிழ் மக்களின் உயிர் காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சி தமிழர் தாயகமெங்கும் இந்த முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தில் பல் வேறுபட்ட தரப்பினராலும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











# இன்றைய ராசி பலன்கள் - 16.05.2024




இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும். தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.




இன்று மிதமான வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிபடுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இரவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதிநிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மனதில் பதற்றங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பதற்ற காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. இழப்புகளைத் தவிர்க்க பணத்தை பாதுகாக்க வேண்டும்.

பதற்றம் மற்றும் அதிகரிக்கும் பணிகள் காரணமாக தலைவலி பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவுக்கான வாய்ப்புக் குறைவு.இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் அல்லது தொடை வலி ஏற்படலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.05.2024




இன்று சிறிது மந்தமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் அதில் நற்பலங்களைக் காண முடியும்.

பணியில் கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும். கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் உங்கள் திறமை மேம்படும்.

இன்று நீங்கள் அற்பமான விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணம் குறைந்து காணப்படும். பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

உங்கள் தந்தையாருக்கு உடல் நல பாதிப்பு ஏற்படும். இதனால் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று தன்னம்பிக்கை குறைவாக வும், நம்பிக்கையின்மையும் காணப் படும். உங்கள் லட்சியங்களை அடைவ தில் தடை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளில் தவறு நேர வாய்ப்பு உள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையுடன் ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது. உறவில் அமைதி ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் அவசியம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது பண இழப்பு ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி மற்றும் உயரமுத்த வாய்ப்புகள் காணப்படும்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் திருப்தி நிலவும். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் சகஜமான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் மகிழ்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் அமைதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பல உற்சாகமான தருணங் களை நீங்கள் சந்திக்கலாம். புதிய கட்ட வளர்ச்சி காண்பீர்கள். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பைப் பகிர்ந்துகொள் வீர்கள். இது இருவருக்கும் இடையே பரஸ்பர புரிந்து ணர்வை வளர்க்கும்.

பண வரவு சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.





